Puducherry / Regional Bulletin / Tamil /18.10 Hrs. / 01.02.2025 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 01.01.2025 - சனிக்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பட்ஜெட்டில்,12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, வருமான வரி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான தன-தான்ய கிருஷி திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ளன.

140 கோடி இந்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதில் அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் பட்ஜெட் அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் மத்திய பட்ஜெட்டை வரவேற்றும், விமர்சித்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

பட்ஜெட் - 1

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த, வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில்,12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, வருமான வரி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பள வருமான பிரிவினருக்கு, நிரந்தர கழிவையும் சேர்த்து, வருமான வரி விலக்கு வரம்பு 12 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயாக இருக்கும் என்று நிதியமைச்சர் பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.

-தனி நபர் வருமான வரிக்கான புதிய ஸ்லாப் விவரங்களும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி

4 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு வரி இல்லை என்றும், 4 முதல் 8 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு வரி விகிதம் 5 சதவிதமாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

8 முதல் 12 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு 10 சதவிகித வரியும்,

12 முதல் 16 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு 15 சதவிகிதம்,

15 முதல் 20 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு 20 சதவிகிதம், மற்றும்,

பட்ஜெட் - 2

20 முதல் 24 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு 25 சதவிகித வரியும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

25 லட்சத்திற்கு மேற்பட்ட ஆண்டு வருமானம் மீது, வரி விகிதம் 30 சதவிகிதமாக இருக்கும் என்றும், நிதி அமைச்சர் தெரிவித்தார்.

**மத்திய பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்.**

- மூத்த குடிமக்களின் வட்டி வருமானம் மீதான வரி விலக்கு வரம்பு, 50 ஆயிரம் ரூபாயில் இருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- திருத்திய வருமான வரிப் படிவங்களை தாக்கல் செய்வதற்கான கால வரம்பு, 2 ஆண்டுகளில் இருந்து, 4 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

- வேளாண் உற்பத்தி, மற்றும் பல்வகை பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், பிரதமரின் தன தான்ய க்ரிஷி யோஜனா திட்டம், நாட்டின் 100 மாவட்டங்களில் அமலாக உள்ளது.

- பயறு உற்பத்தியில் சுயசார்பை எட்ட சிறப்பு இயக்கம் தொடக்கப் பட உள்ளது.

- முதல் முறையாக தொழில் தொடங்கும் SC-ST வகுப்பினர் மற்றும் பெண்கள் 5 லட்சம் பேருக்கு, 2 கோடி ரூபாய் வரை கடன் வழங்க புதிய திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பட்ஜெட் - 3

- பீகாரில், தாமரை விதை உற்பத்தியை அதிகரிக்க மக்கனா வாரியம் அமைக்கப்பட உள்ளது.

- கிசான் கடன் அட்டை மூலம் பெற்ற கடன் மீது விவசாயிகள் செலுத்தும் வட்டியை திருப்பி அளிப்பதற்கான திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ், 3 லட்சம் ரூபாய் கடன் வரம்பு, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் தேசிய உற்பத்தி இயக்கம் ஒன்றை அரசு தொடக்க உள்ளது. தோல் மற்றும் காலணி உற்பத்தி துறைக்கு சிறப்பு கவனத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

-உலகின் பொம்மை உற்பத்தி கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த முக்கிய கவனம் செலுத்தப்பட உள்ளது.

-ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதம் 20 கோடி ரூபாயாக, அதிகரிக்கப்பட்டுள்ளது.

- குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதம் 10 கோடி ரூபாயாகவும், திறம்பட்ட முறையில் செயல்படும் சிறு-குறு மற்றும்

நடுத்தர ஏற்றுமதி நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதம் 20 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- அடுத்த 3 ஆண்டுகளில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புற்று நோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

## பட்ஜெட் - 4

- மின்சார வாகன பேட்டரிகளை தயாரிக்கத் தேவையான, மேலும் 35 மூலதனப் பொருட்களுக்கும், மொபைல் போன் பேட்டரிக்குத் தேவையான மேலும் 28 மூலதனப் பொருட்களுக்கும், வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

-நிதி பற்றாக்குறை காரணமாக, கட்டுமானம் தடைப்பட்டுள்ள, ஒரு லட்சம் வீடுகளை கட்டி முடிக்க, நகர்ப்புற பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுடன் கூடிய சிறப்பு சாளரம் தொடக்கப்பட உள்ளது.

-அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கும் வகையில், ஜல்ஜீவன் இயக்கம், 4 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.

- சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டம், மறு புத்தாக்கம் செய்யப்படும் என்றும், நகர்ப்புற தொழிலாளர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு புதிய திட்டம் அமலாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

- மாணவர்களிடையே புதுமையாக்க முயற்சிகளைத் தூண்டும் வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் 5 ஆயிரம் அரசுப் பள்ளிகளில், அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அமைக்கப்பட உள்ளன.

-நாடு முழுவதும், மருத்துவ கல்லூரிகளில் 10 ஆயிரம் மாணவர் சேர்க்கை இடங்களும், ஐஐடி உயர்கல்வி நிறுவனங்களில், 6 ஆயிரத்து 500 இடங்களும், கூடுதலாக சேர்க்கப்பட உள்ளன.

## பட்ஜெட் - 5

-தேசிய அளவில், திறன் மேம்பாட்டிற்கான 5 செவ்வியல் மையங்கள் தொடக்கப் பட உள்ளன. செயற்கை நுண்ணறிவு குறித்து, செவ்வியல் மையம் அமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட்டில், வளர்ச்சியை துரிதப் படுத்தவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப் படுத்தவும், தனியார் முதலீடுகளை பெருக்கவும், நடுத்தர பிரிவு மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவும், முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.

நிதித்துறையில், சீர்திருத்தங்களை கொண்டுவரும் வகையிலான, புதிய வருமான வரித்திட்ட மசோதா அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படும் என்றும் புதிய வரிவிதிப்பு மசோதா நடப்பு கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பட்ஜெட் தாக்கல் முடிந்த பிறகு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும், நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன.

முன்னதாக, நிதியமைச்சர் பட்ஜெட் தாக்கல் செய்தபோது, எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் மக்களவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். மஹாகும்ப மேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து, விவாதங்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டதை, இவர்கள் ஆட்சேபித்தனர்.

## மோடி பட்ஜெட்

நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட், 140 கோடி இந்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதில் அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில், இது ஒரு முக்கிய மைல் கல் என்று, பட்ஜெட் தாக்கலுக்குப் பின்னர், சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் அவர் கூறியுள்ளார். நாட்டில், சேமிப்பு, முதலீடு, மற்றும் நுகர்வை பல மடங்கு பெருக்கி, வளர்ச்சியை ஊக்குவிக்கும் கருவியாக பட்ஜெட் திகழ்வதாகவும், அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக, 12 இலட்சம் ரூபாய் வரை உள்ள ஆண்டு வருமானத்திற்கு, வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளதால், நடுத்தர மக்கள்

பெரிதும், பயன்பெறுவா◌ர◌்கள் என்றும், பட்ஜெட்டினால், வேளாண்துறையின் அதிகாரம் மேம்பட்டு, ஊரகப் பொருளாதாரம், வளம் பெறும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், சிறு வணிகர்கள், மற்றும் தொழில் முனைவோரின் அதிகார மேம்பாடு மூலம் உற்பத்தியை பெருக்கவும், பட்ஜெட்டில் முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சுகாதார அமைச்சர் திரு. ஜெ.பி நட்டா, வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் உள்ளிட்டவர்களும், பட்ஜெட்டை வரவேற்றுள்ளனர்.

## புதுச்சேரி கருத்து -1 ()

புதுச்சேரியில் மத்திய பட்ஜெட்டை வரவேற்றும், விமர்சித்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து, நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் பட்ஜெட் இது என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். விவசாயிகளுக்கான பிரதமரின் தன-தான்யா கிருஷி திட்டம், வேளான் துறையை புதிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்றும், சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் உயர்வு, போன்ற திட்டங்கள் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும், செயற்கை நுண்ணறிவு மையம் போன்ற உத்தேசங்கள், கல்வியை டிஜிட்டல் மயமாக்க உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மாநிலங்களில், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான 50 ஆண்டு வட்டி இல்லாத கடனாக, ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் பாராட்டத் தக்கது என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், புதுச்சேரி மாநிலத்தை முற்றிலுமாக புறக்கணித்துள்ள இந்த பட்ஜெட், உப்பு-சப்பில்லா பட்ஜெட் என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில்...

(வாய்ஸ்)

## புதுச்சேரி கருத்து - 2 ()

புதுச்சேரி தாகூர் அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், பொருளாதார பேராசிரியருமான டாக்டர் எ.மு. ராஜன் பட்ஜெட் குறித்து, செய்தியாளரிடம் பேசுகையில்...

(வாய்ஸ்)

**புதுச்சேரி கருத்து - 3 ()**

புதுச்சேரியைச் சேர்ந்த அரசு ஊழியர் கோபால கிருஷ்ணன் பட்ஜெட் குறித்து கூறுகையில்…

**(வாய்ஸ்)**

## புதுச்சேரி கருத்து - 4 ()

புதுச்சேரியைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி பட்டதாரி கீர்த்தி வாசன் கூறுகையில்…

(வாய்ஸ்)

**புதுச்சேரி கருத்து - 5 ()**

புதுச்சேரியைச் சேர்ந்த குடும்பத் தலைவி அனிதா பட்ஜெட் குறித்து கருத்து வெளியிட்டுப் பேசுகையில்...

**(வாய்ஸ்)**

கருத்து (12)

மத்திய பட்ஜெட்டை ஃபிக்கி, CII உள்ளிட்ட தொழில் வர்த்தக கூட்டமைப்புகள் வரவேற்றுள்ளன. வரி விகிதங்கள் குறைக்கப்பட்டு வரி விலக்கு உச்ச வரம்பு 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு இருப்பதே, இவ்வாண்டு பட்ஜெட்டின் சிறப்பு அம்சங்கள் என்று ஃபிக்கி தலைவர் திரு.ஹர்ஷவர்தன் அகர்வால் கூறியுள்ளார். தோல், காலணி, மற்றும் சுற்றுலாத் துறைக்கான முன் முயற்சிகளால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 12 இலட்சம் ரூபாய் வரையுள்ள வருமானத்திற்கு வரி இல்லை என்பதால், நடுத்தர மக்களின் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் என்று ஃபிக்கி துணைத்தலைவர் திரு. ஆனந்த் கோயங்கா கூறியுள்ளார். தனிநபர் வரி விதிப்பில் இருந்து, நடுத்தரப் பிரிவினர் அனேகமாக முற்றிலும் விலக்கப் பட்டு இருப்பதே பட்ஜெட்டின் மிகப் பெரிய பயனாக அமையும் என்று CII அமைப்பைச் சேர்ந்த திரு.ஷர்துல் ஷ்ராஃப் கூறியுள்ளார்.

## எதிர் கட்சிகள் (10)

மத்திய பட்ஜெட் குறித்து, பல்வேறு எதிர்கட்சித் தலைவர்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளனர். வேலைவாய்ப்பு உட்பட இளைஞர்களின் பிரச்சனைகள் குறித்து, பட்ஜெட்டில் பேசப்படவில்லை என்று, காங்கிரஸ் எம்.பி திரு. சசி தரூர் கூறினார். நடுத்தர மக்களை பொறுத்தவரை , வெறும் கண் துடைப்பாகவே பட்ஜெட் அமைந்து இருப்பதாக, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. திரு. அபிஷேக் பானர்ஜி தெரிவித்தார். தென்மாநிலங்கள் முற்றிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளதாக, திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் குற்றம் சாட்டினார். ஆயினும், பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ள வருமான வரி சலுகைகளை வரவேற்பதாக சிவசேனா கட்சியின் உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ப்ரியங்கா சதுர்வேதி தெரிவித்தார்.

## கும்பமேளா (17)

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இந்தியா மட்டுமின்றி உலகெங்கிலும் இருந்தும், பல கோடி மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இன்று, இந்தியாவிற்கான பல்வேறு நாடுகளின் தூதர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் உட்பட 117 பேர் அடங்கிய பிரதிநிதிக் குழு ஒன்று, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியது. பின்னர் இந்தியாவிற்கான தென்னாப்பிரிக்க தூதர் திரு. அனில் சூக்கல் செய்தியாளர்களிடம் பேசுகையில், மஹா கும்பமேளா, இந்து மதம் சார்ந்த விழா மட்டுமே அல்ல என்றும், ஒட்டுமொத்த மனித குலத்தை கொண்டாடுவதற்கான உலகளாவிய விழா என்றும் கூறினார். இந்தியாவிற்கும், நேபாளத்திற்கும் இடையே, நீண்டகாலமாக நிலவி வரும், மத மற்றும் நாகரிக உறவுகளின் ஒரு பகுதியாகவே கும்பமேளா திகழ்வதாக, இந்தியாவிற்கான நேபாள தூதர் டாக்டர் சங்கர் பிரசாத் ஷர்மா தெரிவித்தார். தூதர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளின் குழு இன்று பிரயாக்ராஜில், படே ஹனுமான் கோவில் உள்ளிட்ட இடங்களுக்குச் சென்ற பின்னர், டிஜிட்டல் மஹா கும்ப அனுபவ மையத்தில், விழாவின் ஆழமான பொருளை விளக்கும் வகையிலான தொழில்நுட்பக் காட்சிகளையும் பார்வையிடுகிறது. மஹா கும்பமேளாவில் பங்கேற்று, திரிவேணி சங்கமத்தில் புனித நீராட, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரயாக்ராஜ் வருவதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பட்ஜெட்டில்,12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, வருமான வரி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான தன-தான்ய கிருஷி திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ளன.

140 கோடி இந்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதில் அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் பட்ஜெட் அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் மத்திய பட்ஜெட்டை வரவேற்றும், விமர்சித்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / CN / RK